

எச்.ஐ.வி/எய்ட்ஸ்
ஊடகக் கையேடு
இந்தியா 2007



# எச்.ஐ.வி/எய்ட்ஸ் ஊடகக் கையேடு

## இந்தியா 2007

**HIV/AIDS MEDIA MANUAL India 2007**

எச்.ஐ.வி /எய்ட்ஸுக்கான ஐரோப்பிய அமைப்பு ஊடகக் கூட்டு முயற்சி

**THE EU-INDIA MEDIA INITIATIVE ON HIV/AIDS**

**HIV/AIDS
MEDIA MANUAL
India 2007**

# தாம்ஸன் பவுண்டேஷன்

**எச்.ஐ.வி/எய்ட்ஸுக்கான**
**ஐரோப்பிய யூனியன்இந்திய ஊடகக் கூட்டு முயற்சி**

## எச்.ஐ.வி/எய்ட்ஸ் ஊடகக் கையேடு இந்தியா 2007


ஆசிரியர்
மிம்மி ஜெயின்

வடிவமைப்பு
ரூபக் கோஸ்வாமி

தமிழாக்கம்
பி.வி. ரமணன்

திட்ட இயக்குனர்கள்
ஜேனட் பாஸ்டன்
சரத் பிரைஸ்

செயல்பாட்டுத் தலைவர்
இயான் மாஸ்டர்ஸ்

திட்ட ஆசிரியர்
சவ்யசாச்சி ஜெயின்

கையேடு வருவதில் பங்களிப்பு

ஜான் ரெயான்
அதுல் தேவ் சர்மா
கொரம் ஓமர்
பத்மா பாலசுப்பிரமணியம்
பரோனி ஜேம்ஸ்
சாரா பேஜ்
அய்மி கோட்மேன்

பொறுப்பாசிரியர் தமிழ்
சு.நாகரத்தினம்



**எச்.ஐ.வி/எய்ட்ஸுக்கான ஐரோப்பிய யூனியன் இந்திய** ஊடகங்களுக்கான முயற்சி. ஐரோப்பிய யூனியனின் நிதி உதவியோடு இது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த கையேட்டில் இடம் பெற்றிருக்கும் அனைத்து கருத்துக்களும் தாம்ஸன் பவுண்டேஷனின் பொறுப்பேயன்றி ஐரோப்பிய யூனியனின் நிலையை பிரதிபலிக்கவில்லை.





# உள்ளடக்கம்

நூல் அறிமுகம் 5

1 எச்.ஐ.வி/எய்ட்ஸுக்கு 25 வயது 7

2 எச்.ஐ.வி/எய்ட்ஸ் அடிப்படைகள் 17

3 எச்.ஐ.வி. தாக்கமும் அதன் நிர்வகிப்பும் 25

4 பாலின பரிமாணங்கள் 31

5 சிறுவர் எதிர்நோக்கும் ஆபத்து 37

6 அறவியலும் மொழிப் பயன்பாடும் 43

7 படைப்பும் உருவாக்கமும் 49

8 சர்ச்சைகளும் வாதங்களும் 53

9 தொடர்பு முகவரிகள் 61





**HIV/AIDS**
**MEDIA MANUAL**
**India 2007**



எச்.ஐ.வி/எய்ட்ஸ்
ஊடகக் கையேடு
இந்தியா 2007

# நூல் அறிமுகம்

செய்தி ஊடகங்களுக்கான இந்த கையேட்டை உருவாக்குவது மிகுந்த திருப்தியை தருவதாக இருக்கிறது. 2005ம் ஆண்டுக்கான கையேடு பெரும் வரவேற்பைப் பெற்றது. உயரிய நோக்கத்தை உறுதி செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது அக்கையேடு, பயன்படுத்துவோரின் தன்மைக்குப் பொருந்தும் வகையில் வசீகரத்தன்மையோடு வடிவமைக்கப்பட்டிருந்தது. தங்களது பல்வேறு திட்டங்கள் மற்றும் பட்டறைகளில் பயன்படுத்துவதற்காக எண்ணற்ற நிறுவனங்கள் இந்த கையேட்டின் கூடுதல் பிரதிகளை விரும்பி கேட்டன. அலாஸ்கா முதல் இந்தோனேஷியா வரை கையேட்டின் நகல்களின் தேவைகள் பெரிதளவில் தெரிவிக்கப்பட்டன.

ஐரோப்பிய கூட்டமைப்பு மற்றும் இந்திய ஊடகங்களுக்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக இக்கையேட்டை உருவாக்கியது திருப்தி அளிப்பதாக இருந்தாலும், எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய முனைப்பை ஏற்படுத்தக்கூடிய அளவில் மன நிறைவை தரக்கூடியது என்று கையேட்டைக் கூற முடியவில்லை. பத்திரிகையாளர்கள், எச்.ஐ.வி+ கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோருடன் நடத்தப்பட்ட கருத்துப் பட்டறைகளும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான இனிய பாடல்களை உருவாக்குவதும் செய்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட விருதுகள் போன்றவைகளும் எழுச்சியைத் தருவதாகவும் ஊக்கமளிப்பதாகவும் இருந்தன. என்றாலும் இத்துறையில் செய்திகளுடன் தொடர்புடையவர்களோடு கையேட்டின் மூலமாக தொடர்பு கொள்வதைத்தான் நாங்கள் எங்களது பணிகளில் மிக முக்கியமானதாக கருதுகிறோம்.

சரியாக தகவல்களையும் அடிப்படைகளையும் அறிந்திராத காரணத்தாலேயே, எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய செய்திகளை எழுதுவதிலும் தெரிவிப்பதிலும் பல செய்தியாளர்களுக்கு தயக்கம் இருக்கிறது. எய்ட்ஸ் பற்றிய சூழலானது புரிந்து கொள்ள முடியாத அடிப்படைகளைக் கொண்டிருப்பதோடு, பயம், பாரபட்சம், மறுதலித்தல், கலாச்சார விளைவுகள், அரசியல் பின்னணி இவற்றால் உருவாகியிருக்கும் நிலையோடு இணைந்து பெரும்பாலும் அச்சுறுத்துவதாகவே இருக்கிறது. இது தொடர்பான கேள்விகள் பல. இவை ஏற்படுத்தக்கூடிய உணர்வுரீதியான பரபரப்புகளும் மிக அதிகம்.

புதிய பத்திரிகையாளரையும் கூட ஆர்வம் பெறச் செய்ய, எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எய்ட்ஸ் பற்றிய புதிர்களை விடுவித்து அதை அறிந்து கொள்வதை நோக்கி அவர்களை இட்டுச் செல்லும் பாதையாக இந்தக் கையேடு விளங்க வேண்டும் என்பது இதன் நோக்கம். ஏற்கனவே எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றி எழுதும் பத்திரிகையாளருக்கு புதிய தகவல்களையும் இக்கையேடு தருகிறது. எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்று பற்றிய அடிப்படைகள், தற்கால நிகழ்வுகள், செய்தியாளருக்கான வழிமுறைகள், அறவியல் நெறிமுறைகள், பொருத்தமான மொழிநடை, பகுப்பாய்வுக் கட்டமைப்பு மற்றும் படைப்புக்கான கருத்துக்கள் ஆகியவற்றை இக்கையேடு உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

ஐரோப்பிய கூட்டமைப்பின் (European Union) நிதி உதவியோடு தாம்ஸன் பவுண்டேஷன் இந்த முயற்சி'ல் ஈடுபட்டிருக்கிறது. இந்தியாவில் எச்.ஐ.வி/எய்ஸோடு வாழ்பவர்களின் கூட்டமைப்பு (INP+) காமன்வெல்த் தகவல் ஒலி/ஒளிபரப்புக் குழு, எழுத்தறிவு மற்றும் வளர்ச்சிக்கான ஊடகக் நிர்வாகக் குழு மற்றும்ஸ பின்லாந்திலுள்ள டாம்பியர் பல்கலைகழகத்தின் ஒரு பகுதியான ஜீன் மானட் ஐரோப்பிய திறன் மையம் ஆகியவை இதில் எங்களுடன் இணைந்துள்ளன. இவர்களைத் தவிர, இந்த கையேடு வெளிவருவதற்குக் காரணமான அனைவருக்கும் எங்களது நன்றி.

ஊடகங்களில் பணியாற்றுபவர்கள் குறிப்பிட்ட கால எல்லைகளுக்குள்ளும் போட்டிகளுக்கும் இடையே பணியாற்றுகிறார்கள். எங்களது கூட்டு முயற்சியின் பலனாக, அவர்களது கடமையாற்றலை சற்றே எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்த நோக்கம் நிறைவேறும் போது தான் இந்த கையேடை உருவாக்கக் காரணமான அனைவரின் முயற்சியும் அர்த்தமுள்ளதாக மாறும்.

**சவ்யசாச்சி ஜெயின்**
திட்ட ஆசிரியர்
எச்.ஐ.வி /எய்ட்ஸுக்கான ஐரோப்பிய அமைப்பு இந்திய ஊடகக் கூட்டு முயற்சி.